பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

06 12 2024 **FRIDAY** **6.30 PM**

மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. வடகிழக்கு மாநிலங்களின் மேம்பாட்டிற்காக கடந்த பத்தாண்டுகளில் ஐந்து லட்சம் கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. போலி செய்திகளை கட்டுப்படுத்துவதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு எல். முருகன் தெரிவித்துள்ளார்.

3. தமிழகத்தில் ஃபெஞ்சல் புயல் பாதிப்புகளை ஆய்வு செய்வதற்காக மத்தியக்குழு இன்று சென்னை வந்து சேர்ந்தது.

4. வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி நாளை உருவாக வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

5. 19 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

---- இனி விரிவான செய்திகள் ----

<<<<<<<>>>>>>

வடகிழக்கு மாநிலங்களின் மேம்பாட்டிற்காக கடந்த பத்தாண்டுகளில் ஐந்து லட்சம் கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

வடகிழக்கு மாநிலங்களின் கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் திருவிழாவை இன்று புதுதில்லியில் தொடங்கிவைத்து அவர் பேசினார்.

இந்த மாநிலங்களின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதோடு, எதிர்காலத்திற்கான அடித்தளமும் வலுவாக அமைக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

மத்தியில் பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர், வடகிழக்கு மாநிலங்களில் வன்முறை சம்பவங்கள் குறைந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

காங்கிரஸ், மத்தியில் ஆட்சிப்பொறுப்பில் இருந்தபோது வடகிழக்கு மாநிலங்களின் வளர்ச்சியில் உரிய கவனம் செலுத்தவில்லை என்றும் திரு நரேந்திர மோடி குறை கூறினார்.

<<<<<<<>>>>>>

மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், பட்ஜெட்டுக்கு முந்தைய ஆலோசனையை இன்று புதுதில்லியில் தொடங்கினார்.

பொருளாதார நிபுணர்கள் இந்த கூட்டத்தில் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>>>

வேளாண் விளைப்பொருட்களுக்கு உற்பத்திச்செலவில் 50 சதவீதத்திற்கும் கூடுதலாக குறைந்தபட்ச ஆதரவு விலையை வழங்குவதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக வேளாண்துறை அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.

இன்று மாநிலங்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், சில பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை உற்பத்தி செலவைவிட 100 சதவீதம் அதிகமாக நிர்ணயிக்கப்படுவதாக தெரிவித்தார்.

இதுதொடர்பாக, சாமிநாதன் குழு அளித்த பரிந்துரையை பிஜேபி தலைமையிலான மத்திய அரசுதான் நிறைவேற்றியுள்ளதாகவும் அவர் கூறினார்.

காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு, விவசாயிகளின் கோரிக்கையை நிறைவேற்றவில்லை என்றும் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

நாட்டின் ஜனநாயகத்திற்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் வெளியிடப்படும் போலி செய்திகளை கட்டுப்படுத்துவதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு எல். முருகன் கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், இதற்கென தனிப்பிரிவு ஒன்று பத்திரிகை தகவல் அலுவலகத்தில் செயல்பட்டு வருவதை சுட்டிக்காட்டினார்.

பத்திரிகையாளர்களுக்கான நெறிமுறைகளை ஊடகங்கள் முழுமையாக பின்பற்ற வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

தவறான மற்றும் போலியான செய்திகள் வெளியிடுவதை ஊடகங்கள் தவிர்க்க வேண்டும் என்றும் திரு எல். முருகன் வலியுறுத்தினார்.

<<<<<<<>>>>>>

அஇஅதிமுக ஆட்சிக்காலத்தில் ஏழு பாலங்கள் ஆற்றில் அடித்து செல்லப்பட்டதாக பொதுப்பணித்துறை அமைச்சர் திரு எ வ வேலு கூறியுள்ளது தவறான தகவல் என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் ஃபெஞ்சல் புயல் காரணமாக, தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட பாலம் மூன்று மாதத்தில் ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டதை பார்வையிட்டு ஆய்வு செய்தபின் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

அஇஅதிமுக ஆட்சிக்காலத்தில் பெரிய நிறுவனங்களை கொண்டு கட்டுமானங்கள் தரமானதாக நடைபெற்றதாகவும் திரு எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

திருப்பூர் அருகே ஒரே குடும்பத்தை சேர்ந்த 3 பேர் கொலை செய்யப்பட்ட வழக்கில் காவல்துறையுடன் இணைந்து சிபிஐ விசாரிக்க தமிழக அரசு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு அண்ணாமலை வலியுறுத்தியுள்ளார்.

பாதிக்கப்பட்ட குடும்பத்தினரை இன்று நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

இந்த சம்பவம் தொடர்பாக, தமிழக காவல்துறையினர் சிறப்பாக விசாரணையை மேற்கொண்டு வருவதாகவும் அவர் கூறினார்.

இருப்பினும், சிபிஐ-யையும் இணைத்து இந்த விசாரணையை மேற்கொள்ள வேண்டும் என்று தாம் மத்திய உள்துறை அமைச்சருக்கு கடிதம் எழுத உள்ளதாகவும் திரு அண்ணாமலை கூறினார்.

<<<<<<<>>>>>>

தமிழகத்தில் ஃபெஞ்சல் புயலால் ஏற்பட்ட பாதிப்பிற்கு தமிழக அரசின் மெத்தன போக்கே காரணம் என்று தமாகா தலைவர் திரு ஜி கே வாசன் குற்றம் சாட்டியுள்ளார்.

விழுப்புரம் அருகே புயலினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கிய பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

உள்ளாட்சி அமைப்புகள் முறையாக செயல்படாததே இந்த பாதிப்புக்கு காரணம் என்றும் அவர் கூறினார்.

வெள்ள பாதிப்பிற்கு தேவையான நிவாரண உதவியை மத்திய அரசு உரிய நேரத்தில் வழங்கும் என்றும் திரு ஜி கே வாசன் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி நாளை உருவாக வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(சவுண்ட் பைட் - செந்தாமரை கண்ணன் - 74 செகண்ட்ஸ்)*

இதற்கிடையே, ஃபெஞ்சல் புயலால் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து ஆய்வு செய்வதற்காக மத்தியக்குழுவினர் இன்று சென்னை வந்து சேர்ந்தனர்.

உள்துறை இணைச்செயலர் திரு ராஜேஷ் குப்தா தலைமையிலான எட்டு பேர் கொண்ட இந்த குழுவினர், வெள்ள பாதிப்புகளை ஆய்வு செய்ய உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - சுரேகா — 30 செகண்ட்ஸ்)*

<<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

பெரம்பலூர் மாவட்டத்தில் ஒன்பது கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திருமதி கிரேஸ் பச்சாவ், ஆயிரத்திற்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு இன்று வழங்கினார்.

-------------------

காஞ்சிபுரம் மாவட்டத்தில் எயிட்ஸ் தடுப்பு மற்றும் நுகர்வோர் உரிமை குறித்த விழிப்புணர்வு பேரணிகளை ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் இன்று தொடங்கிவைத்தார்.

-------------------

விருதுநகர் மாவட்டத்தில் சுற்றுச்சூழல் தொடர்பான பயிலரங்கு ஆட்சியர் திரு ஜெயசீலன் தலைமையில் இன்று நடைபெற்றது.

-------------------

ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணத்தில் உள்ள ஐ என் எஸ் ராஜாளி கடற்படை பயிற்சி பள்ளியில் ஹெலிகாப்டர் பயிற்சி நிறைவு விழா இன்று நடைபெற்றது.

-------------------

திருப்பத்தூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நேரு யுவகேந்திரா சார்பில் மாவட்ட அளவிலான இளையோர் திருவிழா நடைபெற்றது.

-------------------

செகந்திராபாத் - விழுப்புரம் இடையே வரும் 12-ஆம் தேதி சிறப்பு ரயில் இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது. மறுமார்க்கத்தில் இந்த ரயில் 13-ஆம் தேதி விழுப்புரத்திலிருந்து புறப்பட்டு செல்லும்.

<<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

19 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

ஷார்ஜாவில் நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில், இந்தியா ஏழு விக்கெட் வித்தியாசத்தில் இலங்8கையை வென்றது.

இப்போட்டியில் டாஸ் வென்று முதலில் பேட் செய்த இலங்கை தொடக்கம் முதலே விக்கெட்டுகளை இழக்கத்தொடங்கி 46 புள்ளி இரண்டு ஓவரில் 173 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

அதிகபட்சமாக **Lakvin Abeysinghe** 69 ரன் எடுத்தார்.

சேத்தன் சர்மா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

174 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பின்னர் பேட் செய்த இந்தியா 3 விக்கெட் இழப்பிற்கு 175 ரன் எடுத்து வெற்றிபெற்றது.

நாளை மறுநாள் நடைபெறவுள்ள இறுதியாட்டத்தில் இந்தியா – பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

------------------

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல் நாளான இன்று ஆட்டநேர இறுதியில் ஆஸ்திரேலியா முதல் இன்னிங்சில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 86 ரன் எடுத்துள்ளது.

அடிலெய்டில் நடைபெற்ற இப்போட்டியில், **Nathan Mcsweeny** 38 ரன்னுடனும், **Marnus Labuschagne** 20 ரன்னுடனும் களத்தில் உள்ளனர்.

முன்னதாக, டாஸ் வென்று முதலில் பேட் செய்த இந்தியா முதல் இன்னிங்சில் 180 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

அதிகபட்சமாக நிதிஷ்குமார் ரெட்டி 42 ரன் எடுத்தார்.

**Mitchell Starc** அபாரமாக பந்துவீசி 6 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

------------------

செவித்திறன் குறைபாடு கொண்டவர்களுக்கான ஆசிய பசிபிக் விளையாட்டுப்போட்டிகளில் இந்தியா 2 தங்கம், மூன்று வெண்கலப்பதக்கங்களை வென்றது.

மலேசியாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின், ஜூடோ பிரிவில் இந்தியா இப்பதக்கங்களை வென்றது.

மகளிர் 48 கிலோ எடைப்பிரிவில் **Milanmeet Kaur**-ம், 57 கிலோ எடைப்பிரிவில் சாக்ஷியும் தங்கப்பதக்கம் வென்றனர்.

மகளிர் 52 கிலோ எடைப்பிரிவில் **Nirchara** –வும், ஆடவர் 66 கிலோ எடைப்பிரிவில் **Rakesh Singh** –கும், 73 கிலோ எடைப்பிரிவில் **Sambid Das**-ம் வெண்கலப்பதக்கம் வென்றனர்.

**<<<<<<<END>>>>>>>**